செய்தி வெளியீடு எண் :1659 நாள் : 14.08.2023

# செய்தி வெளியீடு

மாண்புமிகு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை அமைச்சர் திருமதி என்.கயல்விழிசெல்வராஜ் அவர்கள் தலைமையில் இன்று (14.08.2023) ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை கூட்டரங்கில் கீழ்க்கண்ட பொருண்மைகள் குறித்து ஆய்வுக்கூட்டம் நடைபெற்றது.

1. வன்கொடுமை வழக்குகளில் தீருதவி மற்றும் இதர உதவிகள் வழங்கப்பட்டது குறித்த முன்னேற்றம்.
2. வன உரிமைச்சட்டத்தின் கீழ் தனிநபர் உரிமை மற்றும் சமுதாய உரிமை பட்டாக்கள் வழங்கப்பட்டது குறித்த முன்னேற்றம்.
3. பழங்குடியினர் சாதிச்சான்று மெய்த்தன்மை தொடர்பான இனங்களின் முன்னேற்றம்.
4. மாண்புமிகு முதல்வரின் முகவரி மனுக்கள் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை குறித்த விபரம்.
5. ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறையில் மின்னணு சேவை இணையதளத்தில் இணைக்க எடுக்கப்பட்ட நடவடிக்கை குறித்த விபரம்.

மேற்கண்ட இனங்களில் உடனுக்குடன் துரித நடவடிக்கை மேற்கொண்டு நிலுவையினங்களை குறைப்பதற்கும், பழங்குடியினர் சாதிச்சான்றிதழ்களை விரைவாக வழங்க நடவடிக்கை எடுக்கவும், மாண்புமிகு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை அமைச்சர் அவர்கள் துறை அலுவலர்களுக்கு உரிய அறிவுரைகள் வழங்கினார்கள்.

இக்கூட்டத்தில் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை செயலாளர் திருமதி க.லட்சுமிபிரியா, இ.ஆ.ப., ஆதிதிராவிடர் நலத்துறை இயக்குநர் திரு.த.ஆனந்த், இ.ஆ.ப., காவல்துறை தலைவர் (சமூக நீதி மற்றும் மனித உரிமைகள்) திரு.ரூபேஷ்குமார்மீனா, இ.கா.ப., பழங்குடியினர் நலத்துறை இயக்குநர், திரு.ச.அண்ணாதுரை, ம.தொ.ப., மற்றும் உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**

அரசின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள :

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in